ISSN: 2394-7535

நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்

பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம்பெற்ற மாதஇதழ்

பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2022

முதுகலைத் தமிழ்த்துறை

சிறப்பிதழ்: ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி

பெரியகுளம் - 625 601, தேனி மாவட்டம்.

# இலக்கியங்களில் இயற்கை

**சிறப்பிதழ் ஆசிரியர்**

**Special Issues Editor**

முனைவர் தே.ராஜசீலி

**சிறப்பிதழ் துணை ஆசிரியர்கள்**

**Special Co – Editors**

முனைவர் ஞா.பிரான்சிஸ் கேதரின்

துறைத்தலைவர்

முனைவர் வே.புளோரா பவுலின் மேரி

முனைவர் செள. ஜான்சிராணி

திருமதி லூ.சவரியம்மாள்

ISSN: 2394-7535
நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்
பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்றது

பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2022
முதுகலைத் தமிழ்த்துறை
சிறப்பிதழ்: ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி
பெரியகுளம் - 625 601, தேனி மாவட்டம்.

# இலக்கியங்களில் இயற்கை

**சிறப்பிதழ் ஆசிரியர்**

**Special Issues Editor**
முனைவர் தே.ராஜசீலி

**சிறப்பிதழ் துணை ஆசிரியர்கள்**

**Special Co - Editors**
முனைவர் ஞா.பிரான்சிஸ் கேதரின்,
துறைத்தலைவர்
முனைவர் வே.புளோரா பவுலின் மேரி,
முனைவர் சௌ.ஜான்சிராணி,
திருமதி லூ.சவரியம்மாள்

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎: 044 - 26251968, 26258410, 48601884

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | செங்காந்தளின் செம்மை<br>முனைவர் த.தமிழரசி | 29 |
| 2. | எட்டுத்தொகை நூல்களில் விண்மீன்கள்<br>முனைவர் தி.சி.ராமச்சந்திரன் | 33 |
| 3. | கவிமணியின் கவிதைகளில் இயற்கை<br>முனைவர் ஞா.பிரான்சிஸ்கேதரின் | 40 |
| 4. | குறிஞ்சி கலியில் இயற்கை வருணனை<br>முனைவர் பா.ஹெலன் சோபியா | 46 |
| 5. | பண்டைய தமிழரின் மலரியல் பண்பாடு<br>முனைவர் க.சி.குமரன் | 49 |
| 6. | தேம்பாவணியில் இயற்கை<br>முனைவர் பி.வெ.செமிபிரியா | 55 |
| 7. | கானல்வரியில் இயற்கை வருணனை<br>முனைவர்.சு.மாரித்தங்கம் | 59 |
| 8. | சிலப்பதிகாரத்தில் இயற்கைப் பண்பாடு<br>முனைவர் உ.கருப்பத்தேவன் | 65 |
| 9. | மூவர்தேவாரமும் இயற்கையும்<br>முனைவர் மு.ரேவதி | 73 |
| 10. | திருநறையூர் நம்பி மேகவிடு தூது<br>முனைவர் கோ.கவிதா | 76 |
| 11. | ஐங்குறுநூற்றில் நீர் வளங்கள்<br>முனைவர் ஞா.சுஜாதா | 81 |
| 12. | குறிஞ்சிக்கலியில் இயற்கைப் புணைவு<br>முனைவர் அ.கல்பனாதேவி | 85 |
| 13. | தேம்பாவணியில் இயற்கை<br>முனைவர் வே.புளோரா பவுலின் மேரி | 90 |
| 14. | மதுரைக் காஞ்சி கூறும் ஐந்திணை இயற்கை வளங்கள்<br>ச.இராமேஸ்வரி & முனைவர்.ஜி.பி.முருகானந்தம் | 94 |
| 15. | வாழ்வியலில் இணைந்த இயற்கையெழில்<br>முனைவர் சி.வான்மதி | 99 |
| 16. | இலக்கியத்தில் இயற்கை<br>சி.முனியாண்டி & முனைவர்.சா.சுதா | 104 |
| 17. | வள்ளலார் பாடலில் இயற்கை<br>நா.பரமேஸ்வரி | 108 |
| 18. | பத்துப்பாட்டு படைத்தளிக்கும் இயற்கை எழிலோவியம்<br>முனைவர் ம.புவனேஸ்வரி | 111 |

# 7. கானல்வரியில் இயற்கை வருணனை

முனைவர்.சு.மாரித்தங்கம்
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்
வாவுவஜீஹாவனிதையர் கலை
மற்றும் அறிவியல் கல்லூரி
காயல்பட்டினம்

ஆய்வுச்சுருக்கம்

இலக்கிய வடிவங்களில் காப்பியமும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இதனைப் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்று இரண்டாக வகைப்படுத்துவர். காப்பூ இயம் ஸ்ரீகாப்பியம் ஆகும். பழமரபுகளை மட்டுமல்லாது குறிப்பாக இலக்கண மரபுகளைக் காத்து நிற்கும் தன்மை காப்பியத்திற்கு உண்டு எனலாம். தமிழில் தோன்றியுள்ள காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பெரியபுராணம் தமிழ்நாட்டுக் கதைகளை மூலக் கருவாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன மற்றவை பிறமொழிகளின் தழுவல்களாகவும், தமிழாக்கங்களாகவும் அமைந்துள்ளது எனலாம்.

பெருங்காப்பியங்களுள் சிலம்பு, மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐந்தும் பெருங்காப்பியங்காக எண்ணப்படுகின்றது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப்பொருள்களையும் பெற்று இவை மிளிர்ந்து நிற்கின்றது. ஓர் ஒப்பில்லாத தலைவனையும் தலைவியையும் கொண்டு இயற்றப்படுவதே பெருங்காப்பியமாகும். அப்பெருங்காப்பியங்களுள் முதலாவதாக வைத்துக் கூறப்படுவது சிலப்பதிகாரம் ஆகும். கோவலன் என்ற குடிமகனைப் பாட்டுடைத் தலைவனாக் கொண்டு குடிமக்கள் காப்பியமாக விளங்குகின்ற காப்பியத்தில் இடம் பெறும் கானல்வரியின் சிறப்பினையும், அதில் இடம்பெறும் இயற்கைப் புனைவுகளையும், வருணனைகளையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## முன்னுரை

சிலப்பதிகாரம் ஸ்ரீ சிலம்பூ அதிகாரம் என்று இருவகை சொற்களால் ஆனது. சிலம்பு காரணமாக ஏற்பட்ட கதை ஆதலால் இதற்கு சிலப்பதிகாரம் எனப்பெயர் வந்தது. இக்காப்பியத்தில் இயல், இசை, நாடகம் என்ற முச் சிறப்பையும் காண முடியும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இளங்கோவடிகளால் இக்காப்பியம் எழுதப்பட்டது. இன்பமும், துன்பமும் கலந்து எழுதப்பட்ட இந்நூலில் அக்காலத் தமிழ் மக்களின் வாழ்க்கை பற்றிய செய்திகளும் புகார், உறந்தை, மதுரை, வஞ்சி முதலான நகரங்களும் காவிரி, வைகை முதலான ஆறுகளும் தெய்வங்களும் கூத்துக்களும், அடர்ந்து வளர்ந்த பெருங்காடுகளும் பற்றிய செய்திகள் புனையப்பட்டுள்ளன. தமிழறிஞர்களால் மிகுதியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நூல் இதுவே ஆகும். மேலும் உரையாசிரியர்களால் மேற்கோளாக அதிகமாக எடுத்தாளப்பட்ட பெருமையும் இந்நூலையேச் சாரும்.

சிலப்பதிகாரத்தில் பலவகையான இசைப்பாட்டுக்கள் காணக்கடைக்கின்றன. அதில் கானல்வரிப் பாடலும் ஒன்றாகும்.

'அரசியல் பிழைத்தோர்க்குஅறம் கூற்றாவதுஉம்
உரைசால் பத்தினிக்குஉயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினைஉருத்துவந்துஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்புகாரணமாக
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள் (சிலம்பு, பா.எண்.55)

என்ற முப்பெரும் அரசியல் உண்மைகளைப் பறைசாற்றும் மிகச் சிறந்த காப்பியம் சிலப்பதிகாரமாகும். இதனால் சிலப்பதிகாரக் கானல் வரி பற்றி தெரிந்துகொள்வது அவசியமாகிறது. மாதவியும் யாழிசையுடன் சேர்ந்து கானல்வரிப் பாடல்களைப் பாடுகின்றனர். பாட்டின் இறுதியில் கோவலனின் மனம் மாறுகின்றது. அவனது ஊழ்வினைப் பயனின் காரணமாக அவன் மாதவியை விட்டுப் பிரிகின்றான். முழுநிலவைப் போன்று விளங்கும் மாதவியையும், அவளோடு இணைந்து வாழ்வினையும் மறந்தவனாக தனியாகச் சென்றுவிடுகின்றான். மாதவியும் செயலற்ற நெஞ்சினளாகி தன் காதலனைவிட்டுப் பிரிந்துதனியே இல்லம் செல்கின்றாள். சிலப்பதிகாரத்தில் கானல்வரி ஒரு திருப்புமுனையாகத் திகழ்ந்ததை நம்மால் மறுக்க முடியாது என்பது திண்ணம். கோவலன் மாதவியைவிட்டுப் பிரிந்ததற்கு காரணம் ஊழ்வினையே என்பது இளங்கோவடிகளின் கூற்றாகும்.

**இயற்கைப் புனைவு**

இயற்கை என்பது இயல்பாக இருக்கும் தன்மை கொண்டது. இயல்பாகத் தோன்றுகின்ற பொருள்களும் அவற்றின் இயக்கமும் உயிரினும் அதன் இயக்கமும் போன்றவையும் இயற்கையின் பாற்பட்டதே மனிதர்களாகிய நாமும் இதில் அடக்கம். ஐம்பூதங்களும் இயற்கையின் பாற்பட்டதாகும். இயற்கையின் தன்மை இயல்பாக இருந்தாலும் அதில் மனிதன் திணிக்கும் செயல்கள் செயற்கையானது. ஆதிகால மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினான். பஞ்சபூதங்களை வழிபட்டான். காலம் செல்லச் செல்ல மனிதன் இயற்கையை ஆய்வு செய்து தனக்கு ஏற்றவாறு அமைத்துக்கொண்டான். இயற்கை பற்றி தொல்காப்பியம்,

நிலம் நீர் தீ வளி விசும்பொடுஐந்தும் (தொல்-மரபியல் பா.எண் 641)
கலந்தமயக்கம் உலகம்.

என்று பொருள் தருகிறது. இயற்கை என்ற சொல் நம்மைச் சுற்றியிருக்கின்ற மனிதனால் உண்டாக்கப்படாத நிலம், நீர், காற்று, வானம், தீ ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது.

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூலான அகநானூற்றில் ஔவையார் இயற்கை பற்றிய செய்தியைப் பதிவு செய்துள்ளார்.

வானம் ஊர்ந்தவயங்குஒளிமண்டிலம் (அகநானூறு- பா.எண் 11)

என்ற பாடலில்,வானத்தில் ஓங்கி உயர்ந்து விளங்கும் நெருப்புப் பந்தானதுபூமியில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் வெளிச்சத்தைத் தருகின்றது என்று சூரியனின் தன்மையைக் கூறுகின்றார். இதனால் நாம் அறிய வருவது என்னவெனில் சங்ககாலம் தொட்டே இயற்கையைப் பாடாத இலக்கியங்களோ, இலக்கணங்களோ இல்லை எனலாம். இயற்கை இன்றிமனிதன் இல்லை. மனிதன் இயற்கையோடு இரண்டறக் கலந்தவனாவன். சிலப்பதிகாரக் கானல்வரியில் இளங்கோவடிகள் இயற்கையின் தன்மையைப் பாடாமல் இல்லை. கானல்வரியில் எடுத்தாளப்பட்டுள்ள இயற்கைப் புனைவுகளை ஆராய்வதாக இக்கட்டுரைஅமைகின்றது.

**காவிரி**

தமிழ் இலக்கியங்களில் காவிரி ஆற்றினைப் பாடாத கவிஞர்கள் இல்லை எனலாம். வற்றாத ஜீவநதிகாவிரியின் தன்மையையும் சிறப்பினையும் அளவிடஎல்லையே இல்லைஎனலாம்.

வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத்தலையகடற்காவிரி
புனல் பரந்துபொன்கொழிக்கும்
விளைவறாவியன் கழனி (பட்டினப்பாலைபாடல் 1-8)

வானம் பொய்த்துப்போய் மழை இல்லாமல் போனாலும் பொய்த்துப் போகாமல் என்றென்றும் மனிதர்களுக்கு ஊற்றாய் விளங்குபவள் நம் காவிரிஅன்னை. இதனால் காவிரி ஆற்றினை ஒரு பெண்ணாக புலவர்கள் உருவகப் படுத்தியுள்ளார்.

திங்கள் மாலைவெண்குடையான்
சென்னிசெங்கோல் அதுஓச்சிக்
கங்கைதன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழிகாவேரி
(கானல்வரிபா.எண் 1)

வட்டநிலவினைப் போலமாலை சூடிய வெண்கொற்றக் குடையை உடைய சோழ மன்னன் தனது செங்கோலாட்சியால் கங்கை வரை சென்று ஆட்சி செலுத்தினான். அவன் வடக்கே சென்று ஆட்சி செலுத்தினாலும் அவனுக்கு உரிமை உடைய காவிரி அவனை விட்டு நீங்காதிருப்பாள். இங்கு கங்கையும் காவிரியும் பெண்ணாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. அதுவே கற்புடைய பெண்களின் பொற்புடைக்குணம் என்று ஆசிரியர் கூறுகின்றார். காவிரியைப் பெண்ணாக உருவகப்படுத்தி அதன் தன்மையை வாழ்த்திப் பாடியுள்ளார் கவிஞர்.

மருங்குவண்டுசிறந்துஆர்ப்ப
மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்
கருங்கயல் கண் விழித்துஒங்கி
நடந்தாய் வாழிகாவேரி

(கானல்வரி. பா.எண் 25)

காவிரி ஆற்றின் இரு கரைகளிலும் பூக்கள் பூத்திருக்கின்றது. பூக்களில் மொய்த்துள்ள வண்டுகள் இன்னிசையைப் போர்த்திக்கொண்டு மீன் போன்ற அழகிய கண்கள் விழித்தப்படி ஓடும் காவிரி ஆற்றினை பெண்ணாக நினைத்து வருணித்துப் பாடியுள்ளார் ஆசிரியர்.

### காவிரிப்பூம்பட்டினம்

காவிரிபாயும் காரணத்தினால் வளம்பெற்ற காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பினை இளங்கோவடிகள் இயற்கையோடு கலந்து வருணனையுடன் காட்சிப்படுத்தியுள்ளார்.

மாதரார் கண்ணும் மதிநிழல் நீர்
இணைகொண்டுமலர்ந்தநீலப்
போதும் அறியாதுவண்டுஊசலாடும்
புகாரேஎம் ஊர் (கானல்வரிபா.எண் 6).

இப்பாடலில் பெண்களின் கண்களையும்,வானில் தோன்றிய நிலவையும் கண்டுமலர்ந்த குவளை மலர்களைப் பார்த்து எது கண் என்று தெரியாமல் வண்டுகள் அங்கும் இங்குமாக அலைந்து திரிகின்ற சிறப்பினைப் பெற்றது காவிரிப்பூம்பட்டினம் ஆகும். எங்கும் பச்சைப் பசேலென்று பூக்கள் பூத்துக் குலுங்கும் சிறப்பினைப் பெற்றது இவ்வூராகும்.

கடல்வழிச் செல்வோர் போகும் பாதையில் மணற்பரப்பில் விழுந்திருக்கும் சிறுமலர்களைப் பார்க்கின்றனர்.

மோதி முது திரையால் மொத்துண்டு
போந்துஅமைந்தமுரல்வாய்ச் சங்கம்
மாதர்வரிமணல்மேல் வண்டல்
உழுதுஅழிப்பமாழ்கிஐய! (கானல்வரிபா. எண் 7)

இப்பாடலில் மணல்மேல் மோதும் பெரிய கடல் அலைகளால் தாக்கப் பட்டு கரையோரம் வந்து ஒலிக்கின்றன சங்குகள். அங்கு சிறுமியர்கள் மணல் வீடு கட்டி விளையாடுகின்றனர். அவ்வீட்டினை கடல் அலைகள் வந்து அழிக்கின்றது. சிறுமியர் தான் அணிந்திருக்கும் மாலையைக் கழட்டிஅலைகளைவிரட்டுகின்றனர். அப்போது சிந்திய மலர்கள் மாலைப் பொழுதில் அழகிய கண்களைப் போல ஒளிவீசிகின்றது. அதைப் பார்ப்பவர்கள் அதை கடந்துசெல்லத் துணிவின்றி மயங்கிநிற்கின்றனர். அத்தகைய வளமுடையது காவிரிப்பூம்பட்டினமாகும்.

### நெய்தல் நிலத் தலைவி

கடற்கரை ஒரங்களில் வசித்துவரும் மக்கள் நெய்தல் நிலத்தவர். அவர்களில் ஒரு பெண்ணானவள் வலைவீசி மீன்பிடிப்பதைத் தொழிலாகக் கொண்ட கடல்வாழ் மக்கள் வாழும் பகுதியில் தான் வசிக்கும் குடிசைக்கு அருகில் காயப்போட்டிற்கும் கருவாட்டினைத் தின்னவரும் பறவைகளை ஒட்டுகின்றாள்.

நிணம் கொள் புலால் உணங்பல் நின்றுபுள்
ஒப்புதல் தலைக்கீழுஆக
கணம் கொள் வண்டுஆர்த்துஉலாம் கன்னி
நறுஞாழல் கையில் ஏந்தி
மணம் கமழ் பூங்கானல் மன்னி (கானல்வரி பா.எண்.9)

இப்பாடலில் அப்பெண் பறவைகளை ஒட்டுவதற்காகக் கையில் பூங்கொத்து வைத்திருக்கின்றாள். பூங்கொத்தில் உள்ள பூக்களிலுள்ள தேனை உண்டு மகிழ வண்டுகள் மொய்க்கின்றன. அப்பெண் கொல்லும் வேல் போன்ற கண்களால், அவளைக் காண்பவர்களுக்கு எமனாகக் காட்சியளிக்கிறாள். கடல்வளம் நிறைந்த இச்சிற்றூரில் வாழும் இப்பெண், பெண்ணல்ல. ஒரு நிலவினைப் போன்றவள். இராகு கேது இவளைக் கண்டால் நிலவு என்று எண்ணி இவளது அழகிய முகத்தை கவர்ந்திழுத்திருக்கும் என்று அப்பெண்ணின் அழகிற்கு பல வருணனைகளை ஆசிரியர் இங்கு பதிவு செய்துள்ளார்.

மேலும் இவளைக் காதலியாக எண்ணும் காதலனுக்கு இவளது அழகு மென்மேலும் துன்பத்தை மட்டும் தரக்கூடியதாக அமைகின்றது. கடலுக்குள் சென்று மீனைப் பிடித்து விற்று வாழும் மக்கள் உன்னைப் பெற்றவர்கள். ஆனால் நீயோ உன்னைக் காண்பவர் கண்களுக்குள் புகுந்து அவர்களின் உடல் புகுந்து அவர் உயிரைக் கொன்று வாழ்பவளாய் இருக்கிறாய்.

பொழில் தருநறுமலரேபுதுமணம் விரிமணலே
முழுமதிபுரைமுகமேமுரிபுருவில்இணையே
திரைவிரிதருதுறையே! திருமணல் விரி இடமே
விரைவிரி நறுமலரேமிடை தருபொழில் இடமே
முளைவளர் இளநகையே முழுமதிபுரைமுகமே (கானல்வரிபா.எண். 14,15)

நெய்தல்நிலப் பெண்ணின் அழகுசோலையில் பூத்த புதுமையான வாச மலருக்கும் வாசம் தவழும் கடற்கரை மணல்வெளிக்கும் பேசும் இன்மொழிக்கும், முழுநிலா போன்ற முகத்திற்கும், வளைந்த இரு பெரிய புருவவில்லிற்கும், மீன் போன்ற அழகிய கண்களுக்கும் ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது. இவையனைத்தும் அன்பு கொண்ட தலைவனின் துன்பத்திற்கு காரணமாக அமைகின்றது.

அவளதுஅழகையும் நடையையும் அன்னப்பறவையுடன் ஒப்பிட்டு கூறுகின்றார் கவிஞர்.

சேரல் மடல் அன்னம் சேரல் நடைஒவ்வாய!;
சேரல் மடல் அன்னம் சேரல் நடைஒவ்வாய்!
ஊர் திரைநீர்வேல் உழக்கித் திரிவான் பின்!
சேரல் மட அன்னம் சேரல் நடைஒவ்வாய!; (கானல்வரி பா.எண்.23)

அழகிய அன்னப் பறவையின் நடைபோல் அப்பெண்ணின் நடையும் இருக்கின்றது. அன்னமே, நீ அப்பெண்ணின் பின்னால் செல்லாதே! ஏனென்றால் அவள் அழகால் இவ்வுலகத்தையே வெல்லக் கூடியவள் அவள் நடையும், உன் நடையும் சமமாக உள்ளது என்று மட்டும் எண்ணாதே! அவள் நடை அன்னப் பறவையின் நடையைவிட அழகானது என்று கவிஞர் தம் கற்பனையை மிகவும் அழகாக ஒப்புமைப்படுத்தியுள்ளார்.

**நெய்தல் நிலத் தலைவன்**

கோவலன் பாடிய இசைப்பாடலுக்கு ஏற்ப மாதவியும் வேறு ஒரு கருத்துடையவள் போல வீணையை வாங்கி பாடலைப் பாடுகின்றாள். நெய்தல் நிலத்தில் வாழும் தலைவனின் எண்ணத்தை அப்பாடலின் வெளிப்படுத்துகின்றாள்.

புணர் துணையோடுஆடும்பொறிஅலவன் நோக்கி
இணர் ததையும் பூங்கானல் என்னையும் நோக்கி
..........................................................................................
வணர் கரிஜம்பாலோம் வண்ணம் உணரேனால். (கானல்வரி பா.எண்.31)

என்ற பாடலில் நெய்தல் நிலத் தலைவன் பூக்களில் மலர்கள் தோறும் சென்று விளையாடித் தேனினை உண்டு மகிழும் ஆண் வண்டினைப் பார்க்கின்றான். பூஞ்சோலையில் நின்றிருந்த தலைவியையும் பார்க்கின்றான் தனக்கே இயல்பான அன்புள்ளத்தை விட்டு அவன் பிரிந்து செல்கின்றான்.

துன்பம் உழவாய் துயலப் பெறுதியால்
இன்கள் வாய் நெய்தால் நீஎய்தும் கனவினுள்
..........................................................................................
ஊர்ந்த வழி சிதையஊர்ந்தாய் (கானல்வரி பா.எண்.36)

இப்பாடலில் வருத்தம் தருகின்ற அந்த மாலைப்பொழுதில் தலைவனைக் காணாத தலைவியின் கண்கள் அழுகின்றன. ஆனால் தன் வருத்தத்தை நெய்தல் நிலப் பூவிடம் வெளிப்படுத்துகின்றாள். நெய்தல் நிலப்பூவே, நீயோதேன் சிந்தும் உன் இதழை மூடி, வருத்தமில்லாமல் தாங்குகின்றாய் என்று தன் எண்ண ஓட்டத்தை வெளிப்படுத்துகின்றாள் தலைவி. மேலும் அவர் சென்ற குதிரை பூட்டியதேர் ஊர்ந்து சென்ற தடத்தினை கடல் அழித்துவிட்டதாகக் கூறுகின்றாள்.

தலைவன் சென்ற பாதையை எல்லாம் அழித்துவிட்ட கடல் தலைவி தனது காதலனுடன் கூடிக் களித்திருந்த அழகிய மலர்ச்சோலையையும் துணையோடு கூடியிருக்கும் அன்னப்பறவையையும் பழிக்கின்றாள். தனக்குத் துணையாக இருந்தவர்கள் துன்பத்தை மட்டும் தந்து உறவாக இல்லாமல் அந்நியமாகி விட்டனர் என்று நெய்தல் நிலத்தலைவனின் பிரிவைத் தாங்கமாட்டாது இயற்கையோடு இயைந்த துன்ப நிகழ்வாக எடுத்துரைக்கின்றாள்.

தலைவன் தலைவியைவிட்டுப் பிரிந்து சென்று விடுகின்றான. பரதவர்கள் வாழும் சேரிக்குடியிருப்புகள் அதிகமாக காணப்படும் கடற்கரையின் நெய்தல் நிலத் தலைவனால் தலைவிக்கு ஏற்பட்ட துன்பம் அளவிடற்கரியது என்பதை கீழ்கண்ட பாடல் விளக்குகின்றது.

சேரிபரதர் வலைமுன்றில்
திரைஉலாவு கடல் சேர்ப்ப
மாரிப் பீரத்துஅலர் வண்ணம்
மடவாள் கொள்ளகடவுள் வரைந்து
ஆர்இக் கொடுமைசெய்தார்
(கானல்வரி பா.எண்.38).

தலைவனால் ஏற்பட்டதுன்பத்தால் தலைவியின் உடல் பீர்க்கம் பூ நிறம் கொண்டதன்மையதாய் மாறுகின்றது. இந்நிலமை ஏற்பட்டதற்கு காரணம் யாதெனமற்றவர்கள் அறிந்துகொண்டால் தன் தாய்க்கு என்ன பதிலுரைப்பது என்று எண்ணி தலைவியின் நெஞ்சம் புலம்புகின்றது. என்னவென்று அறியமுடியாத பலவகைத் துன்பத்தையும் தந்த நெய்தல் நிலத் தலைவனை எண்ணி தலைவி புலம்பும் செய்தி இங்கு எடுத்துரைக்கப்படுகின்றது.

மாலையும் இரவும்

தலைவியின் உயிரைக் கொல்லும் தன்மையதாக மாலையும் இரவும் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது.

மதிஉமிழ்ந்துகதிர் விழுங்கிவந்த இம்மருள் மாலை
பறவைபாட்டுஅடங்கினவேபகல்செய்வான் மறைந்தனனே
நிறைநிலா நோய் கூர நெடுங்கண் நீர் உகுத்தனவே
..............................................................................
மற்றவை ஆய் என் உயிர்மேல் வந்த இம்மருள் மாலை (கானல்வரிபா.எண். 41,42)

இப்பாடல் தலைவனைப் பிரிந்த தலைவிக்கு சுடும் நெருப்பைச் சுமந்து வந்து துன்பத்தைத் தருவதாக மாலையும், இரவும் அமைகின்றது. கதிரவனும் மறைந்துவிட்டான். காரிருளும் வந்துவிட்டது. பாடித் திரியும் பறவைகளின் குரலும் அடங்கிவிட்டது.

முழுநிலவும் வந்து துன்பத்தை மேலும் கூட்டுகிறது. வருந்திக் கண்ணீர் வடிக்கின்றது தலைவியின் கண்கள். இந்நிலை அறியாத பொழுதுகள் துன்பத்தை தருவதாக ஆசிரியர் இங்கு கூறிச் செல்கின்றார். இரவும், பகலும் பொழுதுகளும் மாறிவருவது இயற்கை. நம் மனதின் எண்ண ஓட்டத்திற்கு ஏற்றவாறு இயற்கையை பழித்துப் பேசுவது இயல்பாக நடக்கின்ற ஒரு நிகழ்வாக இலக்கியத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

செங்கால் நாரை

நெய்தல் நிலத் தலைவனிடம் தலைவிபடும் துயரங்களை எடுத்துக் கூறும் ஒரு தூதாக பறவைகளும் இடம் பெற்றிருப்பதை நாம் இலக்கியங்களில் காணமுடிகின்றது.

அடையல் குருகே! அடையல் எம் கானல்
அடையல் குருகே! அடையல் எம் கானல்
உடைதிரைநீர்ச் சேர்ப்பதற்கு உம் கானல் (கானல்வரி பா.எண்.46)

இப்பாடல்,சிதறிவிழும் அலைகடல் ஓரம் வந்து குளிர்மலர்ச் சோலையில் நிற்கும் செங்கால் நாரையே,நெய்தல் நிலத்தலைவனிடம் பிரிவுத் துன்பத்தால் வாடும் தலைவியின் நிலையை எடுத்துக் கூறாத நீ இங்கு வரவேண்டாம் என்று தலைவி புலம்புவதாக அமைகின்றது.

நாரைவிடு தூது என்ற இலக்கியத்தில் புலவர் ஒருவர் நாரையைத் தூது விடுவதாகபாடல் அமைகின்றது.

நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படுபனையின் கிழங்குபிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
..............................................................
பாடுபார்த்திருக்குமென் மனைவியைக் கண்டு
ஏழையாளனைக் கண்டனம் எனுமே (தமிழ்நாடு பாடல் நூல் கழகம், 2007, பக்.46, 47)

இப்பாடலில் வறுமையில் உள்ள புலவர் அவரது நிலையைத் தன் மனைவிக்குக் கூற நாரையைத் தூதாக அனுப்பிய செய்தி இங்கு கூறப்பட்டுள்ளது. இயற்கையைநாம் கூறவந்த நோக்கில் அனைத்து விதமான கருத்துகளும் இயற்கையோடு இயைந்ததாக இருப்பதை நம்மால் காணமுடிகின்றது. இயற்கை இல்லையேல் மனிதன் இல்லை எனலாம். இயற்கையும், மனிதனும் ஒன்று. நாம் செயற்கையைப் பதிவுசெய்யும் போது இயற்கை தன் கோபத்தை அழகாகவும், ஆக்ரோஷமாகவும் வெளிப்படுத்துவதை காணமுடிகின்றது.

முடிவுரை

சிலப்பதிகாரத்தில் கானல்வரியில் இடம்பெற்றுள்ள இயற்கைப் புனைவுகளை நாம் கண்கூடாகக் காணமுடியும். கூறப்பட்டிருக்கும் அனைத்து செய்திகளையும் நம்மால் எடுத்துக்கூற முடிவதில்லை ஏனென்றால் காப்பியங்களில் அடங்கும் செய்திகள் ஒன்றிரண்டு அல்ல அவை நம் வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ளது எனலாம். நாம் நமது செயல்களுடன் இயற்கையை ஒப்பிட்டு கற்பனையாகவும்,உண்மையாகவும் பலவித செய்திகளை எடுத்துரைக்கின்றோம். இயற்கையில் புனையப்பட்ட பல செய்திகளை கற்றுக்கொள்கிறோம். கற்றுக் கொண்ட

பாடத்தைநாம் சிந்தனைகள் மூலம் கருத்துருவாக்கம் செய்து அதை நன்முறையில் செயல்படுத்த முடியும். கானல் வரியில் இயற்கை புனைவுகள் அதிக வில் இடம்பெற்றுள்ளன என்பதை இக்கட்டுரையின் மூலம் நம்மால் உணர்ந்துகொள்ளமுடிகிறது.

## தொகுப்புரை

இலக்கிய வடிவங்களில் காப்பியமும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. பழமரபுகளை மட்டுமல்லாது குறிப்பாக இலக்கண மரபுகனைக் காத்து நிற்கும் தன்மை காப்பியத்திற்கு உண்டு எனலாம். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் பெற்று இவை மிளிர்ந்து நிற்கின்றது. ஓர் ஒப்பில்லாத தலைவனையும் தலைவியையும் கொண்டு இயற்றப்படுவதே பெருங்காப்பியமாகும். சங்ககாலம் தொட்டே இயற்கையைப் பாடாத இலக்கியங்களோ, இலக்கணங்களோ இல்லை எனலாம். இயற்கை இன்றி மனிதன் இல்லை. மனிதன் இயற்கையோடு இரண்டறக் கலந்தவனாவன். சிலப்பதிகாரக் கானல்வரியில் இளங்கோவடிகள் இயற்கையின் தன்மையைப் பாடாமல் இல்லை. கானல்வரியில் எடுத்தாளப்பட்டுள்ள இயற்கைப் புனைவுகளும் வருணனைகளும் இக்கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ளது.

## பார்வைநூல்கள்

1. சிலப்பதிகாரம்,ஞா.மாணிக்கவாசகன்,ப.எண்:7 பதிப்புஆண்டுடிசம்பர் 2010,உமாபதிப்பகம்,சென்னை-600001.
2. தொல்காப்பியம், மூலமும் உரையும்,கு.வெ. பாலசுப்பிரமணியன் ப.எண்.418,பதிப்புஆண்டு-ஏப்ரல் 2019,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை-600098.
3. அகநானூறு மூலமும்,உரையும்,முனைவர்.இரா.செயபால், ப.எண்.32,பதிப்புஆண்டு-ஏப்ரல் 2004,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை-600098.
4. பத்துப்பாட்டு மூலமும் உரையும்,முனைவர்.அ.மா.பரிமணம்,ப.எண்.303,பதிப்புஆண்டு- ஏப்ரல் 2004,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், 41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை-600098.
5. தமிழ்நாடுபாடநூல் கழகம், வகுப்பு.7,ப.எண்.-46,47,பதிப்புஆண்டு 2007, சென்னை-600006.

# ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி

(தேசிய தரமதிப்பீட்டுக் குழுவினரால் நான்காம் சுற்றில் முதல் தர "A+" நிர்ணயம் பெற்றது)

**DST FIST Supported College**

(கொடைக்கானல் அன்னை தெரசா பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது)

பெரியகுளம் - 625 601, தேனி மாவட்டம்.

**முதுகலைத் தமிழ்த்துறை** மற்றும் **நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்**

**(New Centurian Ungal Noolagam : ISSN:2394-7535, UGC Care Listed)**

**இணைந்து நடத்திய**

**பன்னாட்டுக் கருத்தரங்கம்**

# சான்றிதழ்

திரு/திருமதி/முனைவர்/செல்வி ......சு. மாரித்தங்கம்......

அவர்கள் "இலக்கியங்களில் இயற்கை" எனும் பொருண்மையில் 19.12.2022 அன்று நடைபெற்ற இணையவழி பன்னாட்டுக் கருத்தரங்கில் பங்கேற்று ......கானல்வரியில்......இயற்கைவருணனை...... எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வாசித்தார் என்று சான்றளிக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| திருமதி **சவரியம்மாள்** | முனைவர் **ராஜசீலி** | முனைவர் **பிரான்சிஸ் கேதரின்** | அருட்சகோதரி முனைவர் **சேசுராணி** | **சண்முகம் சரவணன்** |
| அமைப்புச் செயலர் | ஒருங்கிணைப்பாளர் | துறைத்தலைவர் | முதல்வர் | பதிப்பாளர் & பொறுப்பாசிரியர் உங்கள் நூலகம் |